
# மன்னா

## CSI தமிழ் திருச்சபை அலைன்




பொழிவு12 பிப்ரவரி 2019 ஆகாரம் 02






# மன்னா

CSI தமிழ் திருச்சபை அலைன்

Recognition given to Manna quiz winners, articles writers, and all who worked in various fields to bring out Manna.














| பிப்ரவரி 2019 மாத ஊழியங்கள் Service / Ministry in the Month of February 2019 | | |
|---|---|---|
| 01st Feb 11:00AM-1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 01st Feb 7:00PM - 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 8th Feb 6:30AM | சுருக்க ஆராதனை இன்ப சுற்றுலா | முஷ்ரிஃப் பார்க், துபாய் |
| 15th Feb 7:00PM - 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 16th Feb 7:30PM-8:30PM | பெண்கள் ஐக்கிய சங்கம் மாதாந்திர ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 22nd Feb 7:00PM - 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 28th Feb 11:30PM to 12:30AM | மாத இறுதி மற்றும் புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |
| 8th Feb அன்று மாலை ஆராதனை நடைபெறாது | | |

## உள்ளே


ஆயர் மடல்
திருமறை தியானப்பகுதி
திட்டங்கள்
ஆயரம்மா மடல்
செயலரிடமிருந்து
கட்டுரைகள்
சிறுவர் பகுதி
தினசரி வேதவாசிப்பு
வேத வினா விடை போட்டி
பிறந்த நாள் மற்றும்
திருமண நாள் ஆசரிப்போர்


## CSI தமிழ் திருச்சபை- அல்-அய்ன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் - ஓயாசிஸ் ஆஸ்பித்திரி வளாகம், அல்-அய்ன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service / திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Every Friday / எல்லா வெள்ளி | 6:15 PM | Children's Bible School / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| All Wed /எல்லா புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer மாத இறுதி மற்றும் புதிய மாத துவக்க ஆராதனை |

## ஆயர் மடல்...

*அன்புக்குரியவர்களே!*

***புதிய பிப்ரவரி மாதத்தின் வாழ்த்துக்கள்!***

*நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து ஞானத்திலும் வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார் என்பதைப்போல, இந்த எபிபனி காலத்திலே திருச்சபை மக்களாகிய நீங்கள் எல்லா விதத்திலும் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். குறிப்பாக இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வளர்வதற்கு முயற்சி செய்வீர்களாக! இந்த புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள நீங்கள் ஒவ்வொருவரும் வேதவசனங்களை ஆழமாகப்புரிந்துகொள்ள முயற்சி செய்வீர்களாக! அவ்வாறு புரிந்து கொண்ட சத்தியத்தை அன்றாட வாழ்வில் கடைபிடிக்க முயற்சி செய்வீர்களாக! இவ்வாறு செய்தால்தான் கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்து பார்த்து அதை விசுவாசத்தோடு பிறருக்கு பறைசாற்றும்வகையில் ஒரு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முயற்சி செய்கிறோம் என்பது விளங்கும்.*

*குடும்பத்தில், திருச்சபையில், சமூகத்தில் நாம் கனிகளைக்-கொடுக்கிறோமா...? நாம் சகலவிதத்திலும் வளர்ந்து கொண்டே இருக்கிறோம் என்பதின் அடையாளத்தை காட்டுவதுதான் இந்த கனிகள். ஒட்டுமொத்த வளர்ச்சியின் வெளிப்பாடுதான் இந்த கனிகள்..! ஆதலால் இந்த புதிய மாதத்தில் நாம் நல்ல கனிகளைக்-கொடுக்கக்கூடிய ஒரு தரமான ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ முயற்சி செய்வீர்களாக..!*

*இவ்வாறு உங்கள் ஆவிக்குரிய கூடாரத்தை விசாலமாக்கினால்! உங்களையும், உங்கள் குடும்பத்தையும் வலதுபுறத்திலும், இடது புறத்திலும் இடங்கொண்டு பெறுகச்செய்வார்!*

*இப்படிக்கு,*
***உங்கள் ஆயர்,***
***Rev. M. Christopher Rajendran.***

***தீமை செய்வோரை "மன்னிக்கவும்" "நேசிக்கவும்" தயாராகும்வரை; தேவ அன்பைப் பற்றி அறிவற்ற தேவப்பிள்ளையாக இருப்போம்.***

# திருமறை தியானப்பகுதி...

*அன்புக்குரியவர்களே,*

***"என் புலம்பலை ஆனந்தக்களிப்பாக மாறப்பண்ணினீர்......நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைக்கட்டினீர்"– சங்கீதம் 30:11.***

***ஆ****ண்டவர் அளித்த ஒரு பெரிய விடுதலைக்கு, ஒரு புதிய மாற்றமுள்ள வாழ்வுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து , பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு பாடின தாவீதின் நன்றிப்பாடல்! இது ஆண்டவரின் கருணையை ருசித்து பார்த்து அதை எண்ணிப்பார்த்து பாடிய சங்கீதம். சத்துருக்களின் எதிர்ப்பு,பயம் நிறைந்த சூழல், ஒரு பெரிய நோய், மரணபயம், ஒரு பெரிய இழப்பு, பெற்ற மகனை இழந்த பரிதாபமான புலம்பல், பெற்ற மகன் அப்சலோமினால் வந்த நம்பிக்கையற்ற சூழல், சவுல் ராஜாவின் கொலைவெறித்தேடல் இப்படிப்பட்ட ஒரு சூழலில் (சங்கீதம் 31:9,10,11,12,13வசனங்களில் தெளிவாக இந்த சூழல் விவரிக்கப்பட்டிருக்கிறது.இரண்டு சங்கீதங்களை சேர்ந்து வாசித்தால் ஆழமாகப்புறிந்து கொள்ளலாம்). கர்த்தர் தன்னைக் கைதூக்கி எடுத்தபடியினால் நான் கர்த்தரைப்போற்றுவேன் என்று முதல் வசனத்தில் வாசிக்கிறோம். **I will extol these, O Lord, for you have drawn me up from the pit,** என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவிடாமல், என் எதிரியின் கையில் என்னை விட்டு விடாமல் என் பாதகங்களை அகன்ற இடத்தில் காலூன்றி நிற்க வைத்தீர்(சங்கீதம் 31:8).துவக்க காலத்திலே தாவீதின் நன்றிப்பாடல், பிற்பாடு கி.மு.515 ல் பாபிலோனிய விடுதலைக்குப் பின் தேவாலயத்தை மறுபடியும் கட்டி பிரதிஷ்டை விழாவில் தாவீதின் நன்றிப்பாடல், இஸ்ரவேல் மக்களின் நன்றிப்பாடலாக பாடப்பட்டதால்தான் இந்த சங்கீதத்தின் தலைப்பில் Song at the dedication of the temple என்று வாசிக்கிறோம்.*

***1-3 வசனங்களில்:** நலம் அளித்த ஆண்டவருக்கு நன்றி. என் ஆபத்தில் விசுவாசத்தோடு கர்த்தரை மறவாதபடி நோக்கி கூப்பிட்டேன் என்கிறார் தாவீது. நாமும் இப்படிப்பட்ட ஒரு சூழலில் இருக்கும்போது நம்முள்ளத்திலே முதலாவது செய்யவேண்டியது **விசுவாசம்.** Verse 2 **O Lord my God I cried to these for help, and you have healed me.** விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை சுகமாக்கும். 3ம் வசனத்தில் என்னை குணமாக்கினீர் கர்த்தாவே என்று தேவ தொடுதலை அனுபவித்து*

*பாடுகிறான். தனது ஆத்துமாவை, பாதாளத்திலிருந்தது ஏறப்பண்ணி , தன் ஆத்துமாவைக்காத்தார் என்பதை பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு இயேசு கிறிஸ்துவின் மூலமாக கிடைக்கும் இரட்சிப்பை விசுவாசத்தோடு பாடுகிறான்.தாவீது இதை எந்த அளவுக்கு புரிதலோடு பாடியிருப்பான் என்று சொல்லமுடியாது. தன் சரீர விடுதலையை தனது ஆத்மாவின் விடுதலையாக பாட ,பரிசுத்த ஆவியானவர் தான் துணை செய்திருக்கிறார்.*

***4-5 வசனங்களில்:*** *கர்த்தருக்கு நாம் நன்றிகூறவேண்டும் என்று மக்களாகிய நம்மை அழைக்கிறார்.* ***கர்த்தருடைய பரிசுத்தவான்களே,அவரைக் கீர்த்தனம்பண்ணி Sing praises to the Lord, O you His saints. தூயவராம் அவரை நினைந்து கொண்டாடுங்கள், நன்றி கூறுங்கள் !*** *Verse 5 கர்த்தருடைய கோபம் நொடிப்பொழுது, ஒரு நிமிடம், ஏசாயா 54:7 ல் இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன் என்ற கர்த்தருடைய வார்த்தைக்கு அர்த்தம் கூறுவதுபோல கர்த்தருடைய ஒரு நொடிக்கோபம் எவ்வளவு பெரிய பாடுகளையும் நமக்கு கொண்டு வருகிறது என்பதை நாம் புரிந்து கொண்டு கர்த்தருடைய கோபத்தைத்தூண்டும் பாவங்களை விட்டுவிட நாம் மிகத்தீவிரமாக இருக்கவேண்டும்கர்த்தருடைய. கோபம் ஒரு இரவைக்கழிப்பதுபோல மிகவும் குறுகியது,* ***(purely temporary)*** *என்பதை நாம் உணரவேண்டும், காரணம் கர்த்தர் இரக்கமும், கமனதுருக்கமும் உள்ளவர். நமக்கு இந்த மாதத்தில் விடியல் பிறக்கும், களிப்புண்டாக்க கர்த்தர் ஆயத்தமாக இருக்கிறார்.அதைத்தான் சாயங்காலத்தில் அழுகை தங்கும் விடியல் காலத்திலே களிப்புண்டாகும் என்று 5 ம் வசனத்தில் பார்க்கிறோம்.*

***6-7 வசனங்களில்***: *தாவீது தன் சொந்த பெலன் பெருகும் பொழுது அதை ஒரு நொடிப்பொழுதும் சார்ந்திருக்கக்கூடாது என்பதை உணர்ந்து 6th verse ல் நான் வளமுடன் விழுந்தபோது,என்னை ஒருவரும் அசைக்க முடியாது என்று நினைத்தால் பெருமை உள்ளவனுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்க்கிறார் அல்லது தன் முகத்தை மறைக்கிறார் என்பதை 7ம் வசனத்தில் பார்க்கிறோம்.*

***8-12வசனங்களில்:*** *கர்த்தரிடத்தில் மன்றாட்டுச்ஜெபத்தை ஏறெடுக்கிறான். கர்த்தரை மறக்கக்கூடாது, அவரைக்கொண்டாடி, துதித்து மகிழவேண்டும். பாதாளத்திற்க்கு செல்பவர்கள் கர்த்தரை ஸ்தோத்தரிக்க, துதிக்க மாட்டார்கள், கர்த்தரும் அவர்களை மறந்துவிட்டார், கைவிட்டார் என்ற எச்சரிக்கையாக நினைப்பூட்டுகிறார்.*

*ஆரம்பத்தில் விசுவாசத்தோடு ஜெபித்த ஜெபம்,நம்பிக்கையை ஸ்திரப்படுத்தி, விடுதலையை சுதந்தரிக்கச்செய்து, அதை விசுவாசத்தோடு பாடத்தூண்டியது.அதைத்தான் 11 ம் வசனத்தில்...* ***கர்த்தர் புலம்பலை ஆனந்த களிப்பாக மாறப்பண்ணினீர் என்று தாவீது பாடுகிறான்!***

***நாமும் இந்த புதிய மாதத்தில் நம்முடைய சொந்தப்பாடலை பிறர்கேட்டு கர்த்தரைப்போற்றும்வண்ணம் பாடுவதாக! பாடுவோமா?***

*அன்புடன்...* ***உங்கள் ஆயர்,***
***Rev. M .Christopher Rajendran.***

## ***திட்டங்கள் / PROJECTS***

### ***Project for Children Bible School.***

- *Write Proverb 4:1-10 and submit before 22nd Feb 19.*

### ***Project for youth:***

- *Write one page about goal setting of your life both physical and Spiritual.*

### ***Project for Men's Fellowship/ Women's Fellowship:***

- *Prepare yourself for the discussion on Psalm 30, how God transform your lamentations in to shouts of joy and dance based on our Meditation in Manna.*

### ***Project for Congregation:***

- *Write one page about your faith, love and conviction on Jesus Christ. The best write-up will be published in Manna. it should be reached before 20th Feb 19.*
- *உங்கள் விசுவாசம், அன்பு, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நம்பிக்கையைப் பற்றி ஒரு பக்கத்தில் கட்டுரை எழுதி பிப்ரவரி' 20 ஆம் தியதி'குள் அனுப்பி வையுங்கள். சிறந்த கட்டுரை அடுத்த மன்னாவில் வெளியிடப்படும்.*

## Children who did the Projects...

***Eastrine, Erline, Roshan, Jonathan, Joel Shino, Jeremiah, Joshua, Shelbino Paul, Jemimah.***



அன்புக்குரிய தாய்மார்களே!

இந்த புதிய மாதத்தில் பிரசன்ன காலத்திலே அற்புதமாக, தேவனால் தனக்கு கொடுக்கப்பட்ட இயேசு கிறிஸ்து பாலகனையே மரியாள் நோக்கிப்பார்த்து தியானித்துக்கொண்டு, இயேசு பாலகனை சீராக வளர்த்ததுபோல, நாமும் கர்த்தரால் நமக்கு கொடுக்கப்பட்ட பிள்ளைகள்மீது நமது கவனத்தை முழுமையாக திருப்பி, திருப்பி, தியானித்து! அவர்களை கிறிஸ்துவைப் போல முன்மாதிரியாக சீராக அவர்களை வளர்த்தெடுப்போம்.

ஒவ்வொரு இரவு சரியாக 9 மணிக்கு ஜெபக்குறிப்பை ஜெபிக்க வேண்டுகிறேன். வருகிற பெண்கள் ஐக்கிய சங்கம் கூட்டம் திருமதி . ஜாக்குலின் ஹேபா அவர்கள் வீட்டில் 3'ம் சனிக்கிழமை இரவு 7-8 மணிவரை நடைபெறும். தயவு செய்து அனைவரும் கலந்து கொள்ளுங்கள்.

இப்படிக்கு,
**உங்கள் ஆயரம்மா**
***Angel .C***

## இன்ப சுற்றுலா – விபரம்

| | |
|---|---|
| ***Date / தியதி*** | ***08th Feb 2019*** |
| ***Short Service / சுருக்க ஆராதனை*** | ***6:30 Am to 6:50 AM*** |
| ***Picnic Starting Time / இன்ப சுற்றுலா தொடங்கும் நேரம்*** | ***7:00 Am*** |
| ***Starting Location / தொடங்கும் இடம்*** | ***Oasis Campus, Alain*** |
| ***Picnic Location / இன்ப சுற்றுலா*** | ***Mushrif Park, Dubai*** |
| ***Picnic Coordinator / பொறுப்பாளர்*** | ***Mr. Rajavel*** |
| ***Contact No / தொடர்புக்கு*** | ***050 449 1769*** |

இன்ப சுற்றுலா குறித்து கூடுதல் தகவல்கள் உங்களுக்கு தேவைப்படுமாயின், நீங்கள் அதன் பொறுப்பாளர் திரு. ராஜவேல் அவர்களை தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகீர்கள்.

# செயலரிடமிருந்து...

*பிரியமானவர்களே...*

*பூமியின் கடையாந்தரத்திலிருந்து நம்மை தெரிந்து கொண்டு நம்மை பெயர் சொல்லி அழைத்த தேவன் நம்மை அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் மரணபரியந்தம் நடத்த அவர் மாறாதவராய் இருக்கிறார். எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, வாழ்ந்த உங்களையும் என்னையும் கிறிஸ்துவின் அன்பு சந்தித்த விதத்தைத் திரும்பிப் பார்த்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்..*

*சென்ற ஜனவரி மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம்...அவர் நம்மை தேடி வந்து இரட்சித்தார்... பாவக்கறை நீக்கினார்... கண்ணீரை துடைத்தார்... கருத்தாய் விசாரித்தார்... கன்மலை மேல் நிறுத்தி...கண்மணி போல் இம்மட்டும் காத்த தேவனுக்கு மறவாமல் அனுதினமும் நன்றி சொல்லுவோம். நாம் நினைத்ததற்கும் மேலானவைகளை அவர் செய்தார்...*

*திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபித்து, நேசித்து தாங்குகின்ற ஒவ்வொருவருக்காகவும் நான் தேவனைத் துதிக்கிறேன். இன்னும் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன். உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், ஈடுபாடும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க, அதிகமாய் ஜெபித்திட வேண்டுகிறேன்.*

***வரலாற்று நாயகனாம் இயேசுகிறிஸ்து நம் தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்பத்திலும், ஊழியத்திலும் தொடர்ந்து பெரிய காரியங்களைச் செய்வாராக...!!!***

*இப்படிக்கு*
*அன்புடன் கிறிஸ்துவின் பணியில்*
***S. சுரேஷ் ராஜன்***

**தேவனுக்காக எதையாவது செய்வதல்ல; அவர் எதை செய்ய சொன்னாரோ அதை செய்வதே தரமான ஊழியம்.**

வேதாகம களஞ்சியம்

# தெரியுமா உங்களுக்கு.... 3

- ஜெபம் பண்ணி வானத்திலிருந்து அக்கினியை வரவைத்தவர்கள் *3* பேர்கள்
    1. எலியா –*1* இராஜ *18:37,38.*
    2. தாவீது –*1* நாளா *21:25,26.*
    3. சாலொமோன் –*2* நாளா *7:1.*

- யூதர்கள் பழைய ஏற்பாட்டை *3* பகுதிகளாக பிரித்துள்ளனர்.
    1. தோரா, *(Torah)*
    2. நெபீம் *(Nebiim),*
    3. கெத்தூபிம் *(Kethubim)*

- தாவீது *3* முறை ராஜாவாக அபிஷேகிக்கப்பட்டார்
    1. தன் வீட்டார் மத்தியில் *1* சாமு *16:12,13*
    2. தன் கோத்திரத்தார் – மத்தியில் (யூதா)*2* சாமு *2:4.*
    3. தன் தேசத்தாரின் மத்தியில் –*2* சாமு *5:3.*

- கிதியோன் மீதியானியரை ஜெபிக்க *3* சதாரணமான பொருள்களை பயன்படுத்தினார் (நியா *7:16-22).*
    1. எக்காளம்
    2. வெறும் பானை
    3. தீவட்டி

- புதிய ஏற்பாட்டில் குறிபிடப்பட்டுள்ள *3* விதமான கிறிஸ்துக்கள்
    1. இயேசு கிறிஸ்துக்கள் எபி –*13:8*
    2. அநிதிக் கிறிஸ்து –*1* யோவான் *2:18,22*
    3. கள்ளக் கிறிஸ்துக்கள் மத் –*24:24;* மாற் *13:22.*

- பேய் என்ற வார்த்தை பழைய ஏப்பாட்டில் *3* முறை வருகிறது
    1. லேவி *17:7,*
    2. உபா *32:17,*
    3. *2* நாள *11:15.*

- தாவீதின் பராக்கிரமசாலியான என்பவர் ”பெனாயா“*3* சிங்கங்களை கொன்றவன் –*2* சாமு *23:20,22*
- மனுஷனுக்குள் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற *3* தத்துவங்கள் அடங்கியிருக்கிறது –*1* தெச *5:23*

## “அவர்களை நான் எப்போதோ மன்னித்து விட்டேன்”

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள மனோகர்பூர் என்ற சிறு கிராமத்தில், கிறிஸ்துவ பாதிரியார் கிரஹாம் ஸ்டெயின்ஸ் தனது மனைவி மூன்று பிள்ளைகளுடன் தங்கி குடும்பமாக ராஜ்ஜியத்தின் சுவிஷேச ஊழியத்தை நிறைவேற்றி வந்தார் .1965 ல் இந்திவிற்கு வந்த அவர் 34 ஆண்டு காலமாக தொழுநோயாளர் மத்தியில் பணியாற்றி இயேசுவின் அன்பை மக்களுக்கு காண்பித்தது வந்தார். பல வருடங்களாக அந்தக் கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கிரஹாம் ஸ்டெயின்ஸூம் அவரது மனைவி கிளாடிஸூம் இணைந்து தங்களுக்கு கர்த்தரால் நியமிக்கப்பட்ட தேவ சித்தத்தை அன்பும் பரிவுமாக நிறைவேற்றி வந்தனர் .

இவர்களது அன்பிலும் பரிவிலும் நெஞ்சுருகிப் போன அந்தப் பகுதி மக்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இதில் அந்தப் பகுதியில் இருந்த தாராசிங் மற்றும் அவனது கூட்டாளிகளுக்குப் பிடிக்கவில்லை. வெளிநாட்டு பாதிரியார் தங்கள் மக்களை மதம் மாற்றுகிறார் என்று தவறாகக் கருதினர். அவர்களைக் கொல்லவும் முடிவெடுத்தனர்.

ஜனவரி 22-ம் தேதி இரவு அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த வாய்ப்புக் கிடைத்தது. அன்று இரவு, தன்னுடைய ஜீப்பில் மகன்கள் பிலிப், திமோத்தியுடன் கிரஹாம் ஸ்டெயின்ஸ் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். ஜீப்பை சுற்றி வளைத்த தாரா சிங்கும் அவனது கூட்டாளிகள் 12 பேரும் தீவைத்து, மூன்று பேரையும் ஜீப்புடன் உயிருடன் கொளுத்தினர். செய்தி அறிந்து ஒட்டுமொத்த உலகமும் அதிர்ச்சி அடைந்தது.

அந்தச் சம்பவத்தில் தொடர்புடைய தாரா சிங் உட்பட 13 நபர்களும் கைதுசெய்யப்பட்டனர். இதற்கென்று அமைக்கப்பட்ட சிறப்பு நீதி மன்றத்தில் வழக்குநடைபெற்று 2003 -ம் ஆண்டு தாராசிங்குக்கு தூக்குத் தண்டனையும் மற்ற12 பேர்களுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து தாராசிங் தரப்பில் ஒடிசா உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு, 2005-ம் ஆண்டு தாரா சிங்குக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 12 பேர்களில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் விடுதலைச் செய்யப்பட்டனர். இந்தத் தீர்ப்பை எதிர்த்து சி.பி.ஐ. உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. 2011’ம் ஆண்டு ஒடிசா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்தது.

இந்தத் தீர்ப்பு வழக்குப் பற்றியெல்லாம் யோசிக்காமல் கிரஹாம் ஸ்டெயின்ஸின் மனைவி கிளாடிஸ் மீண்டுமாக...'இந்தியர்களை தான் மிகவும் நேசிப்பதாகவும் இந்தியா தான் தனது வீடு' என்று கூறி தன் கணவனின் வழியில்

*தொழுநோயை ஒழிக்கவும், தொழுநோயிலிருந்து குணமான மக்களை சமுதாயத்தோடு ஒன்றிணைக்கவும், தொழுநோய் குறித்த அச்சத்தை மக்கள் மனத்திலிருந்து அகற்றவும் தொடர்ந்து பணியாற்றி.. கிறிஸ்துவின் அன்பை அநேகருக்கு அறிவித்து வருகின்றாகள்.*

*இந்திய அரசு இவரின் சேவையை பாராட்டி 2005-ம் ஆண்டு 'பத்மஸீரி' விருதை இவருக்கு வழங்கியது. அப்போதைய குடியரசு தலைவர் அப்துல்கலாம் இந்த விருதை இவருக்கு அளித்தார். மேலும் கடந்த டிசம்பர் 18,2015 அன்று திருமதி ஸ்டெயின்ஸ்க்கு அன்னை தெரேசா நினைவு விருதும் வழங்கப்பட்டது.*

*2011-ம் வருடம் உறுதி செய்யப்பட்ட இறுதித் தீர்ப்பு வந்தபோது, கிளாடிஸிடம் அவரது கணவரையும் இரண்டு பிள்ளைகளையும் கொன்றவர்கள் பற்றி கருத்துக் கேட்கப்பட்டது. அப்போது* ***கிளாடிஸ் என்ன சொன்னார் தெரியுமா...??***

***" அவர்களை நான் எப்போதோ மன்னித்து விட்டேன்".***

## *கட்டுரைகள்* / ARTICLES

### "உடைக்கப்பட்ட பாத்திரம்"

நமது அன்றாட வாழ்க்கையில் கடந்து வரும் ஒவ்வொரு காரியங்களையும் எண்ணி பார்க்கும் போது ஏன் நான் இப்பேர்பட்ட காரியங்களை கடந்து வர நேரிட்டது ஆண்டவர் என்னை கைவிட்டு விட்டாரோ என்பது போன்ற அனேக கேள்விகள் நம்மில் எழலாம். நியாயாதிபதிகள் 7- ம் அதிகாரத்தை நாம் வாசிக்கும் போது தேவன் தம்முடைய ஜனங்களை எதிராளியின் கையில் இருந்து எவ்வாறு மீட்டெடுக்கிறார். அதற்கென அவர் தம்மடைய பிள்ளைகளை எவ்வண்ணமாக ஆயத்தப்படுத்துகிறார் என்று பார்க்கலாம்.

மீதியானியரை மேற்கொள்வதற்கு கிதியோனுடன் இருந்த மக்களில் தமக்கு தேவையானோரை தெரிந்தெடுக்க செய்கிறார். தெரிந்தெடுத்த முன்னூறு பேரையும் மூன்று பகுதிகளாக பிரித்து அதன் ஒவ்வொன்றிலும் 100 புருஷர்கள் இருக்கும் படி செய்ய தேவன் கட்டளையிட்டு அவர்கள் செய்ய வேண்டியதையும் போதித்தார். அதன் படி ஒவ்வொருவரும் தன் தன் கையில் எக்காளத்தையும் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் எடுத்துக் கொண்டு சென்றார்கள். பானையை உடைத்து வெளிச்சத்தைக் காண்பித்து பின்பு தங்கள் எக்காளத்தை ஊதினார்கள். அப்போது எதிரிகள் எல்லாம் பயந்து கூக்குரலிட்டு சிதறி ஓடினார்கள். கிதியோனும் கோத்திரத்தாரும் வெற்றி கண்டார்கள். இந்த சம்பவத்தை நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் எப்படி இருக்க வேண்டும் நமக்குள்ளே வாசம் செய்யும் ஆவியானவரின் வல்லமையை வெளிப்படுத்த எவ்வாறு ஆயத்தப் படுத்தப்படுகிறோம் என்பதற்கு எடுத்துக் காட்டாக கொள்ளலாம்.

நாம் எல்லோரும் மண் பாண்டங்கள்தான். தேவனின் மகிமையின் ஒளியாகிய பொக்கிஷம் இந்த மண் பாண்டங்களுக்குள் இருக்கிறது. (2 கொரி 4: 6-7) இந்த மண்பாண்டமானது உடைக்கப்படுவதற்கு அனேக சோதனைகளை நாம் கடந்து வர நேரிடும். பல சூழ்நிலைகளில் அல்லது சூழ்நிலைகள் மூலம் தேவன் நம்மை உடைத்திட விரும்புகிறார். அப்பொழுது மாத்திரமே கிறிஸ்துவின் ஜீவனாகிய ஒளி நம் மூலமாக பிரகாசித்திட முடியும். எக்காளத்தை ஊதுவது என்பது கர்த்தருடைய மகிமையையும் அவருடைய வார்த்தையையும் தைரியமாய் பறைசாற்றுவதைக் குறிக்கிறது என்று கொள்ளலாம். வேதத்தில் இந்த விதமாக ஆண்டவர் உபயோகித்த அனேக பாத்திரங்கள் உண்டு. அதில் ஒருவர் தான் மோசே.

மோசே எகிப்தின் இளவரசனாக இருந்த போது தேவன் அவரை நேரிடையாக ஊழியத்திற்கு அழைக்கவில்லை. அவர் நாற்பது வருடம் தன் மாமனாருக்கு ஆடுகளை மேய்த்து ஒரு அடிமைத்தன வாழ்கயை கொண்டிருந்த போது அதாவது நாற்பது வருட அரண்மனை வாழ்க்கை நாற்பது வருட அடிமைத்தன வாழ்க்கையை கடந்து நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவனாக இருக்கிறேன் என்று சொல்லும் சூழ்நிலையில் தான் தேவன் மோசேயை தன் ஊழியத்தை செய்ய அழைத்தார். மோசே உடைக்கப்படுவதற்கு முன் அதாவது அரண்மனை வாழ்க்கையில் இருந்த போது ஒரு எகிப்தியனைத்தான் கொன்றார். ஆனால் நாற்பது வருட வனாந்தர வாழ்க்கைக்கு பிறகோ ஒரு பெரிய சேனையையே மேற்கொண்டார் என்று பார்க்கிறோம். இந்த பெரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு தேவன் அவரை ஆயத்தப்படுத்தினார்.

அனேக வேளைகளில் நெருக்கங்களை கடந்து வரும் போது நாம் சோர்ந்து போகிறோம் விசுவாசத்தில் நலிந்து போகிறோம். ஏன் எனறு கேள்விகளை எழுப்புகிறோம். இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போமா? அவர் நம்மை புடமிட்ட பொன்னைப்போல பிரகாசிக்கப்பண்ணி அவருடைய ஆசீர்வாதத்தின் பாதைக்கு நேராக வழிநடத்துவார்.

***ஆ.நேசமணி.***



***Dear Children's…***
***If you are interested Playing Keyboard for a Song During our Church Service, (during offertory), Please inform us in advance (min 2 weeks) and attend the Choir Practice at Parsonage. Necessary Song Notes, Support & guidance shall be provided as required.***



## நீ தயாரா..???

நீ நேசித்த உறவுகள்
உன்னை தட்டிக் கழித்ததோ.?

தவறித் தடுமாறின உன்னை
தாங்கிட யாருமில்லையோ?

அன்பாய் ஆசையாய் பேசிட
யாரும் அருகில்லையோ..??

உன் மனதை புரிந்தவர்
ஒருவருமில்லையோ...???

கலங்கிடாதே நண்பா...
கர்த்தர் இயேசு உனக்குண்டு...

தன் உதிரத்தைசிந்தி
உயிரையே ஈந்தார் உனக்காய்..

உன் உள்ளத்தைத்
உறைவிடமாக்க விரும்புகிறார்

அவரை உன் மறைவிடமாக்க
நீ தயாரா..???

**"ஏன் வாழுகிறோம்" என்பதில் "தெளிவு இருந்தால்..." வாழ்க்கையை தேவனுக்கும் பிறருக்கும் பயனுள்ளதாய் நாம் அமைக்க முடியும்.**

## STEP BY STEP

*He does not lead me year by year*
*Not even day by day*
*But step by step my faith unfolds*
*My Lord directs my way.*

*Tomorrow's plans I do not know*
*I only know this minute.*
*But He will say,*
*"This is the way by faith*
*Walk ye in it"*

*And I am glad that it is so*
*Today's enough to bear;*
*And when tomorrow comes His grace*
*Shall far exceed its care.*

*What need to worry then or fret?*
*The God who have His son*
*Holds all moments in His hands*
*And gives them one by one.*

*Mrs Ranjitha Vijayasingh*
*(Mother of Sujay)*

# பொறாமை என்னும் விஷம்

பொறாமை மிகவும் மோசமான பாதகங்களுக்கு காரணம் வேதாகமத்தில் பதிவாகப் பெற்றுள்ள முதலாவது கொலைக்கு காரணம். தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாக, காயீன் தன் உள்ளத்தில் கொண்டிருந்த பொறாமை என்னும் விஷமாகும். சவுல் தாவீதை கொலை செய்து தொலைக்கும்படி முயற்சிக்க செய்ததும் பொறாமையே. நமதாண்டவராகிய இயேசுவை கொல்லும்படி யூதர்கள் முயற்சித்ததும் பொறாமையினால்தான்.

எனவே தேவனுடைய ஊழியத்தை உண்மையாய் செய்கிறவர்கள் மற்றவர்களின் கொடிய பொறாமைக்கும் பயங்கரமான துன்புறுத்தலுக்கும் ஆளாவது சகஜம், என்று அறிகிறோம். பொறாமை என்னும் இந்த மோசமான பாவம் கிறிஸ்தவர்களாகிய நமக்குள்ளும் அதிகமாக காணப்படத்தான் செய்கிறது. இது மிகவும் பரிதாபமானது பரிசுத்தமான தேவனுடைய ஆவியானவரும் கிறிஸ்துவின் அன்பும் மாத்திரமே பொறாமை என்னும் வஷத்தை முறியடிக்க முடியும்.

மல்யுத்த வீரர்கள் மன்னன் என்னும் புகழ்பெற்ற தியாஜனிஸ் என்னும் வீரன் இருந்தான் அவன் மரித்தபின் அவனுடைய பெயரையும் புகளையும் நிலைநாட்டும் வண்ணம் அவனுக்கு ஞாபகார்த்த உருவச்சிலை அமைத்திருந்தார்கள் அவன் ஊர்மக்கள். அப்போது இன்னொரு மல்யுத்தனும் இருந்தான். தனக்கு ஈடு எவருமில்லை என்பதாக அவன் மேட்டிமையுள்ளவனாக இருந்தான்

மல்யுத்த வீரனின் மன்னா் என்ற புகழ் பெற்ற திஙாஜனிசை அவனுடைய வாழ்நாளில் தோற்கடிக்க முடியவில்லை என்ற குறை அவனுக்கு இருந்தது. ஆனால் தியாஜனிஸ் தன்னைவிட வல்லவனனாயிருக்ககூடும் என்று ஒத்துக்கொள்ள அவனுடைய பொறாமை மனம் இடங்கொடுக்கவில்லை. ஆகவே, அவள் தியாஜனிஸ்ஸின் சிலையோடு மல்யுத்தமபண்ணி தன் வெற்றியை நிலைநாட்ட எண்ணங்கொண்டான். ஒரு நாள் இருட்டான சமயத்தில் அந்த பொறாமை பிடித்த மனுஷன், தியாஜனசின் சிலையோடு மிகவும் வீராவேசமாய் மல்யுத்தம் செய்தான். அவன் செய்த மல்யுத்தத்தின் விளைவாக அந்த பெரிய சிலை அவன்மீது விழவே அவன் அதில் நசுங்கி செத்தான். ஆம் பொறாமை புத்தியீனமானதும் கேடு விளைவிப்பதுமாகும்.

அன்பானவர்களே! நாம் பொறாமையைப் பற்றி நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பொறாமையோ பிசாசின் மகன். மேட்டிமைக்கு சகோதரன். கோடிய பாதகங்களின் தகப்பன். அது நம்மை கொன்றளிக்கும் முன்னமே நாம் அதை நம்மைவிட்டகற்ற வேண்டும்.

**“பெறாமையுள்ளவர்களாய் நடவாமல் பகலில் நடக்கிறவர்கள் போலச்சீராய் நடக்ககடவோம்” (ரோமா் 13:13).**




*Softly God announces His Presence. Shimmering hues of radiance tap gently at your consciousness, seeking entrance. Though He has all Powers in heaven and on earth, He is infinitely tender with you. The weaker you are, the more gently He approaches you. Let your weakness be a door to His Presence. Whenever you feel inadequate, remember that God is your ever-present Help.*

*Hope in God, and you will be protected from depression and self-pity. Hope is like a golden cord connecting you to heaven. The more you cling to this cord, the more He bears the weight of your burdens; thus, you are lightened. Heaviness is not of His kingdom. Cling to hope, and God's rays of Light will reach you through the darkness.*

*Psalm 46:1; Romans 12:12; Romans 15:13.*



# His Presence

*Look to God continually for help, comfort, and companionship. Because He is always by your side, the briefest glance can connect you with Him. When you look to Him for help, it flows freely from His Presence. This recognition of your need for God, in small matters as well as in large ones, keeps you spiritually alive.*

*When you need comfort, God loves to enfold you in His arms. God enables you not only to feel comforted but also to be a channel through whom He comforts others. Thus you are doubly blessed, because a living channel absorbs some of whatever flows through it.*

*God's constant Companionship is the pièce de résistance: the summit of salvation blessings. No matter what losses you experience in your life, no one can take away this glorious gift.*

*Psalm 34:4–6; Psalm 105:4; 2 Corinthians 1:3, 4.*

***Article by: Ceciliya RajKumar***

# LIVE SUPERNATURALLY

*God wants to give you the power you need to live a fruitful life now and so you can make an impact on eternity. As a believer in Christ, you have Son Power available to you.*

*You have access to this power for supernatural living through the Holy Spirit. As Christ takes up residence in a believer's life, Jesus becomes a conduit for the empowering of the Holy Spirit. This power flows freely when you live a life that is in harmony with God's revealed will. And because the Son's power is eternal, it is this power that we vitally need to accomplish all that God has for us. We must avoid the mistake of trusting in our own limited power to accomplish God's purposes and instead trust in the eternal power of the Holy Spirit.*

*Philippians 2:13 says, For God is working in you, giving you the desire and the power to do what pleases him.*

*When we allow Son Power to work in and through us, our lives, desires, and accomplishments will be transformed. Son Power affects our lives now and creates a lasting impact that stretches into eternity. This great power from God is made manifest in us when we crucify our old lives, putting our old sin patterns to death on the cross. To the degree we agree with Him and do that, it's no longer the darkened old you who lives, but Christ who lives within you, radiating His glory and power through your life. You will become like a prism, reflecting His holiness, goodness, mercy, love and power for the world around you to see.*

*When this takes place, you will truly become more than a conqueror in Jesus (Romans 8:37). Through His mighty Son Power, you will be able to accomplish more than you ever*

*dreamed possible before knowing Him!*

### ***Jesus offers you power for living!***

*Just as the sun is the source of life for the earth, we find that Jesus is the source of our relationship with God. Just as the earth cannot recreate what the sun provides, we cannot recreate for ourselves salvation, eternal life, or the power we need to live our lives for God's purposes. We need Jesus' power in order to live in harmony with God's will for our lives. Only Jesus' divine power and precious promises enable us to tap into the supernatural power God offers us. As believers, our life is to revolve around the Son.*

*The Son-powered life enables us to not only experience the very nature of God now, accomplishing all that he desires for us here on earth, but also empowers us to look forward confidently to the rewards that we will experience in heaven.*

***Article by: Shalini K.Stubert.***

**எத்தனை பேர் நான் இருக்கிறேன் என்று சொன்னாலும்**
**இயேசுவைப்போல் யார் இருக்க முடியும்...???**

**என் இயேசு மட்டுமே அறிவார் என் தாய்க்கும்... நண்பனுக்கும்**
**தெரியாத சிலர் கண்ணீர் துளிகளை...!!!**


## குறிப்பு:

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் **Church Email** அல்லது *WhatsApp* மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

***Your name / Quiz type / Month-Year***
***Sample: lokesh / Childrens Quiz / Feb-19***
***Abiya / Kids Colouring / Feb-19***
***Mrs. Jonish Herchil / Bible Quiz / Feb-19***

**Church Email: csitcalain@gmail.com**

# Cartoon of the




For no matter how many promises God has made, they are "Yes" in Christ. And so through him the "Amen" is spoken by us to the glory of God. – 2 CORINTHIANS 1:20 NIV

Children who wrote the Children's Quiz correct answers:

***Eastrine | Erline | Roshan | Shelbino***
***Jayne John | Annlin | Angelin***

Children who successfully did the Cross Word Puzzle

***Roshan | Eastrine | Erline | Shelbino | Dennis | Diniya | Eric Jayden***

Children who successfully did the Bible Word Search

***Shelbino | Jayne John | Jonathan | Eric Jayden***



## *Children's Quiz (Primary and above)*

***FROM THE BOOK OF JAMES 1-5***

1) *The trying of your faith worketh ______________*
   a) *Success b) Patience c) Trust*

2) *If any of you lack __________________ let him ask of God with faith.*
   a) *Wisdom b) blessings c) Love*

3) *Who will pass away like the flower of a grass?*
   a) *Jealous man b) Angry man c) Rich man*

4) *Everyone must be quick to ____________ but slow to _____________ and slow to become ___________*
   a) *Speak, sin, bad b) listen, speak, sinful c) listen, speak, angry*

5) *"It is evil and uncontrollable, full of deadly poison. What is it?*
   a) *Tongue b) cobra c) Heart*

*COMPLETE THE VERSE:*

6) *"Your friendship with the world is _______________*

7) *"God resists the _____________ and gives ____________ to the humble".*

8) *When you are in trouble ___________________ and when you are happy _________________*
   a) *Pray, exalt b) Pray, praise c) Confess, exalt*

9) *We must not only listen to God's word but also ______________*
   a) *Criticize it b) Discern it c) Practice it*

10) *For what does not worketh the righteousness of God?*
   a) *A man's pride b) A man's anger c) A man's blasphemy*

***Explain the underneath with reference to bible verse***

I. *From where does temptation come? (for below 10 yrs)*

II. *What is prejudice and how does it lead us to sin? (for above 10 yrs)*

## ***Last Month Children's Quiz Correct Answers: January– 2019***

***1) Redemption and forgiveness Eph 1:7 | 2) b Faith Eph 2:8-9***
***3) b Peace. Eph 2:17 | 4) a Devil Eph 4:27 | 5) c kind and tender hearted. Eph 4:32 | 6) a The uncircumcised. Eph 2:11 | 7) b The whole armour of God. Eph 6:11 | 8) b Holy Spirit. Eph 4:30 | 9) Righteousness and holiness Eph 4:24 | 10) 6-10 yrs kids = Eph 6:2 | 10-16 yrs kids = Eph 5:5***

## DAILY BIBLE READING February – 2019

### "Your word is a lamp to my feet and light for my path"

| *Date* | *Morning / காலையில்* | | ✓ | *Evening / மாலையில்* | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| 1 | மாற்கு 4 | Mark 4 | | ஆதியாகமம் 33 | Genesis 33 | |
| 2 | மாற்கு 5 | Mark 5 | | ஆதியாகமம் 34 | Genesis 34 | |
| 3 | மாற்கு 6 | Mark 6 | | ஆதியாகமம் 35 & 36 | Genesis 35 & 36 | |
| 4 | மாற்கு 7 | Mark 7 | | ஆதியாகமம் 37 | Genesis 37 | |
| 5 | மாற்கு 8 | Mark 8 | | ஆதியாகமம் 38 | Genesis 38 | |
| 6 | மாற்கு 9 | Mark 9 | | ஆதியாகமம் 39 | Genesis 39 | |
| 7 | மாற்கு 10 | Mark 10 | | ஆதியாகமம் 40 | Genesis 40 | |
| 8 | மாற்கு 11 | Mark 11 | | ஆதியாகமம் 41 | Genesis 41 | |
| 9 | மாற்கு 12 | Mark 12 | | ஆதியாகமம் 42 | Genesis 42 | |
| 10 | மாற்கு 13 | Mark 13 | | ஆதியாகமம் 43 | Genesis 43 | |
| 11 | மாற்கு 14 | Mark 14 | | ஆதியாகமம் 44 | Genesis 44 | |
| 12 | மாற்கு 15 | Mark 15 | | ஆதியாகமம் 45 | Genesis 45 | |
| 13 | மாற்கு 16 | Mark 16 | | ஆதியாகமம் 46 | Genesis 46 | |
| 14 | லூக் 1: 1-38 | Luke 1:1-38 | | ஆதியாகமம் 47 | Genesis 47 | |
| 15 | லூக் 1:39-80 | Luke 1: 39-80 | | ஆதியாகமம் 48 | Genesis 48 | |
| 16 | லூக்கா 2 | Luke 2 | | ஆதியாகமம் 49 | Genesis 49 | |
| 17 | லூக்கா 3 | Luke 3 | | ஆதியாகமம் 50 | Genesis 50 | |
| 18 | லூக்கா 4 | Luke 4 | | யாத்திராகமம் 1 | Exodus 1 | |
| 19 | லூக்கா 5 | Luke 5 | | யாத்திராகமம் 2 | Exodus 2 | |
| 20 | லூக்கா 6 | Luke 6 | | யாத்திராகமம் 3 | Exodus 3 | |
| 21 | லூக்கா 7 | Luke 7 | | யாத்திராகமம் 4 | Exodus 4 | |
| 22 | லூக்கா 8 | Luke 8 | | யாத்திராகமம் 5 | Exodus 5 | |
| 23 | லூக்கா 9 | Luke 9 | | யாத்திராகமம் 6 | Exodus 6 | |
| 24 | லூக்கா 10 | Luke 10 | | யாத்திராகமம் 7 | Exodus 7 | |
| 25 | லூக்கா 11 | Luke 11 | | யாத்திராகமம் 8 | Exodus 8 | |
| 26 | லூக்கா 12 | Luke 12 | | யாத்திராகமம் 9 | Exodus 9 | |
| 27 | லூக்கா 13 | Luke 13 | | யாத்திராகமம் 10 | Exodus 10 | |
| 28 | லூக்கா 14 | Luke 14 | | யாத்திராகமம் 11 | Exodus 11 | |

# Kids Coloring (Kinder & Beginner)



Dear Kids·· Write your name·· here...

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**Children's who did the Coloring- January 2019**

*Rishon* | *Ridhun* | *Crasslin* | *Johan Sanjo*

*Jehoash John* | *Jonathan * | *Jeremiah* | * Jemimah*



# *Bible Word Search (Beginner / Primary)*








| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q | W | E | R | T | J | O | N | A | H | Y | U |
| I | O | P | A | D | A | M | A | S | D | F | A |
| G | J | H | J | K | E | S | T | H | E | R | B |
| O | M | O | I | W | E | R | D | A | V | I | R |
| L | T | Y | S | U | I | O | A | A | S | M | A |
| I | G | E | A | E | J | K | V | Z | X | O | H |
| A | A | V | A | D | P | G | I | H | J | S | A |
| T | R | E | C | G | B | H | D | G | O | E | M |
| H | Z | X | H | V | B | G | H | U | B | S | Q |
| Z | D | W | D | A | N | I | E | L | B | C | R |
















Your Name here…

# *Bible Cross Word Puzzle*

***Primary & Above***




1) *Mother of Samuel*
2) *Best loved wife of Jacob*
3) *Son of King Amaziah. He became king of Judah at the age of 16*



*6) Sold his birth right to his brother*

*7) Father of Enoch*

*4) The first high priest of Israelites*

*5) Turned his face to the wall and cried to the Lord to add his years of life*

*8) God spoke to him from the burning bush*
*9) Was taken up to heaven by the whirlwind*

*10) Moabite woman who stayed with her mother in law Naomi*

**BIBLICAL PUZZLE**

***PUZZLE 1:*** *I kept him steady and others away, I kept them safe and showed the way Once thrown upon the ground I came alive with a hissing sound I hit the rock as he was told And that was when the water flowed I am in the Bible – What am I?* ________________________

***PUZZLE 2:*** *I had many locks that didn't need a key I was far too many for you to count me I was never to be shortened for a vow had been said I was a symbol of strength that flowed from the head But in a moment of weakness, my secret was out I lay all in pieces when she gave the shout I am in the Bible – What am I?* ____________________________

***PUZZLE 3:*** *I am old but also new I may seem rather strange but all of me is true I am 66 inside but really only one I can be pocket-sized or "times weigh a ton All of me is about a person you really ought to meet He often signs his name and each story is his treat I am a world best-seller but sadly, seldom read Perhaps you have seen me on a shelf or lying by a bed. What am I?* _______________

# வேத வினா விடை போட்டி

***எரேமியா 15 to 24***

1. ***பஸ்கூரை கர்த்தர் மாகோர் மீசாபீப் என்று அழைக்க காரணம் என்ன?***
2. ***யார் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?***
3. ***கர்த்தர் இஸ்ரவேல் மேல் வரக் கட்டளையிடும் நான்கு விதமான வாதைகள் என்ன?***
4. ***எரேமியா தோப்பபேத்திலிருந்து வந்து உரைத்த தீர்க்கதரிசனம் என்ன?***
5. ***கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாகச் சொல்கிற வார்த்தை என்ன?***
6. ***கர்த்தர் யாருக்கெல்லாம் நான் விரோதி என்றுக் கூறுகிறார்?***
7. ***நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகச் செய்த எங்கள் பாவம் என்ன? என்று இஸ்ரவேல் ஜனங்கள் கேட்பார்களானால் அவர்களுக்கு கர்த்தர் கூறும் பதில் என்ன?***
8. ***நல்ல அத்திப்பழங்கள் மூலம் கர்த்தர் எரேமியாவுக்கு கூறிய செய்தி என்ன?***
9. ***அநியாயமாய் ஐஸ்வர்யத்தை சம்பாதிக்கிறவன் எப்படி இருப்பான் என்று கர்த்தர் கூறுகிறார்?***
10. ***யாருடையப் பெயர் புழுதியில் எழுதப்படும்?***

## <u>கடந்த மாதத்திற்கான விடைகள்</u>

*1. எரேமியா )13:9) | 2. எரேமியா)6:6,7) | 3. எரேமியா)10:2-5)*
*4. எரேமியா)14:13) | 5. எரேமியா)12:10-13) | 6. எரேமியா )9:23,24)*
*7. எரேமியா)7:30)*

## கடந்த மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்

***ஜனவரி-2019***



திருமதி . ஜோனீஷ் ஹெர்ஷெல் | திருமதி. நிர்மலா ஜெனிபர்
திருமதி. சிந்துஜா சதீஷ் | திருமதி.ராதிகா செல்வகுமார்.
திருமதி. ரோசிலின் பாலாஜி | திருமதி.எபென் *A* . பிரசாத்.
திருமதி.அகஸ்டா லாரன்ஸ் | திருமதி.பிப்லின் நெல்சன்
திருமதி.ஹெப்சிபாய் நேசமணி | திருமதி.ஜெயின் ராஜவேல்
திருமதி.ஜெயந்தா ஜாண். | திருமதி.பெட்ரீஷியா ஜேசன்.

**இன்னும் வேதத்தை ஆழமாய் கற்க-தியானிக்க-புரிந்துகொள்ள கர்த்தர் உங்களுக்கு அருள்புரிவாராக**

**வாழ்த்துக்கள்...!**

# பிறந்த நாள் மற்றும் திருமண நாள் ஆசரிப்போர்

## பிறந்த நாள் ஆசரிப்போர் / Birthday Celebrants

| Date | Name | Contact |
|---|---|---|
| 12th Feb | Rev. M. Christopher Rajendran | 056 710 5082 |
| 13th Feb | Mr. S. Jensin Bose | 050 233 4421 |
| 14th Feb | Ms. Jainy John | 050 245 5266 |
| 17th Feb | Mr. Sunith Samuel | 056 547 3326 |
| 22nd Feb | Mrs. Jeyantha Belfer | 055 730 9275 |
| 24th Feb | Ms. P. Sherine Carol | 050 573 6697 |
| 25th Feb | Mr. Giftus Marvin | 050 523 7237 |
| 25th Feb | Baby. Hazal Hartlyn | 056 252 4659 |
| 25th Feb | Ms. Mukila Ravichandran | 056 641 1363 |


## திருமணநாள் ஆசரிப்போர் / Wedding Anniversary

| Date | Name | Contact |
|---|---|---|
| 3rd Feb | Mr. Augustin .J<br>Mrs. Nithya | 055 619 9268 |
| 10th Feb | Mr. Kirubharan D<br>Mrs. Esther | |
| 11th Feb | Mr. Justin Oliver<br>Mrs. Sahila Grace Justin | 050 573 7096 |
| 24th Feb | Mr. A. Ravichandran<br>Mrs. R. Muneeswari | 056 641 1363 |

**MAY HE GIVE YOU THE DESIRE OF YOUR HEART AND MAKE ALL YOUR PLANS SUCCEED.**

**PSALM 20:4**

*Happy Birthday & Wedding Anniversary*




Strictly For Private Circulation
Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparish.org